CAREERINDIA

No. of Printed Pages : **11**

**6735**

பதிவு எண்
Register Number

# பகுதி - III – சிறப்புத் தமிழ்
# Part III — Advanced Language — TAMIL

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 180

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

## பகுதி - I

**குறிப்பு :** பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் பொருத்தமான விடைகளைத் தேர்ந்தெடுக்கவும். பொருந்தும் விடையினைக் குறிக்கும் எழுத்தை மட்டும் வினா எண்ணோடு இணைத்து விடைத்தாளில் எழுதவும்.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **4** பகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பிற்கேற்ப வினாக்களைத் தேர்ந்தெடுத்து உரியவாறு விடையளிக்கவும். **30x1=30**

**1.** ‘உலகம் யாவையும் ..........’ எனும் கம்பராமாயணக் கடவுள் வாழ்த்துச் செய்யுள் அமைப்பின் சிறப்பு யாது ?

(அ) கலி விருத்தம் (ஆ) நான்கு அடிகள்
(இ) மங்கலச்சொல் தொடக்கம் (ஈ) ஈற்றசை ஏகாரம்

**2.** கீழுள்ள எதனிலிருந்து தி.பி. ஆண்டு கணக்கிடப்படுகிறது ?

(அ) கி.பி. 100 (ஆ) கி.பி. 31 (இ) கி.மு. 33 (ஈ) கி.மு. 31

[ திருப்புக

www.careerindia.com

CAREERINDIA



3. அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு ?
– இதனுள் குறைகூற குறிக்கப் பெறுபவர் யார் ?

(அ) தலைவன் (ஆ) தலைவி
(இ) தோழி (ஈ) வேறொருவர்

4. பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்தின் பாட்டுடைத் தலைவன் :
(அ) செல்வக் கடுங்கோ வாழியாதன்
(ஆ) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்
(இ) கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்
(ஈ) இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

5. 'ஆற்றுதல் என்ப <u>தொன்ற</u> லர்ந்தவர்க் குதவுதல்'
– எனும் கலித்தொகை அடியில் கோடிட்ட 'ஒன்று' எனும் சொல் எதைக் குறிக்கிறது ?

(அ) தலைவனின் உடனிருப்பு (ஆ) தலைவியின் எண்ணம்
(இ) தலைவியின் ஊடல் (ஈ) தலைவனின் சினம்

6. கீழ்வரும் எவ்வடியிலிருந்து, பெண்கள் ஒப்பனை வழக்கம் வெளிப்படுகிறது ?
(அ) மாதர் செங்கண் வரிவனப் பழித்துப்
(ஆ) மாதவி மணிமே கலைமுகம் நோக்கி
(இ) தாமரை தண்மதி சேர்ந்தது போல
(ஈ) காதல் நெஞ்சங் கலங்கிய காரிகை

7. ''கதிர் முடியும் இம்மையிலே கண்ணுற்றேனே''
– இங்கு குறிக்கப் பெறும் கதிர்முடி யாருக்குரியது ?

(அ) அர்ச்சுனன் (ஆ) கன்னன்
(இ) கண்ணன் (ஈ) துரியோதனன்

www.careerindia.com

CAREERINDIA



8. ‘குளத்தில் அகத்தியராம் அறிஞர் அண்ணா’

– இவ்வடியில் அறிஞர் அண்ணாவின் எப்பண்பு உணர்த்தப்படுகிறது ?

(அ) பல்துறை ஆற்றல் (ஆ) இலக்கியப் புலமை

(இ) அரசியல் ஆற்றல் (ஈ) இலக்கண அறிவு

9. ஒருலக உணர்விற்கு உரிய செயலைக் குறிக்கும் பாடலடி எது ?

(அ) தென்னை உயர நதியுண்டு

(ஆ) மரங்கள் நட்டால் நிழலுண்டு

(இ) உறவை விரிவாய்ப் பறக்கவிடு

(ஈ) கரங்கள் உழைப்பால் உரமேற்று

10. ‘புகழோ திருவோ இலராம் புனைவு புதுமை! புதுமை!!’

– இதனுள் எதிர்மறையும் இகழ்ச்சிக் குறிப்பும் கொண்ட சொல் எது ?

(அ) புகழ் (ஆ) திரு

(இ) புனைவு (ஈ) புதுமை

11. அழகிய சிற்றம்பலக் கவிராயர் நல்ல செல்வர். அவர் குடும்பத்தில் கலைமகளும் திருமகளும் ஒருங்கே களிநடம் புரிந்தனர்.

– இப்பகுதியில் அமைந்துள்ள சிறப்புக் குறிப்பு கொண்டுள்ள தொடர் எது ?

(அ) அழகிய சிற்றம்பலக் கவிராயர்

(ஆ) நல்ல செல்வர்

(இ) கலைமகளும் திருமகளும்

(ஈ) ஒருங்கே களிநடம்

12. ஐயா! நேற்று இராத்திரி தங்கள் முன்னோர்கள் கதையைச் சொல்லி வந்தீர்களே!

- இதில் பயன்படுத்தப்பட்டுள்ள பேச்சு வழக்குச் சொல் எது ?

(அ) ஐயா (ஆ) நேற்று

(இ) இராத்திரி (ஈ) சொல்லிவந்தீர்களே

[ திருப்புக

www.careerindia.com

CAREERINDIA



13. ஈழத்துப் பேச்சு வழக்கில் உள்ள கீழ்க்குறித்த சொற்களுள் எது, சாலை, சாலினி இளந்திரையனாரால் எம்மொழியென அறியப்படாத சொல் ?

(அ) சந்தாலே (ஆ) முஸ்பாத்தி (இ) கந்தோர் (ஈ) பனாட்டு

14. ஈழத் தமிழர்கள் புதிய சொல்லாக்கங்களைப் பேச்சு வழக்கில் கொண்டுள்ளாரெனத் தெரிவிக்க சாலைசாலினியார் தரும் எடுத்துக்காட்டு எது ?

(அ) விற்பனவு
(ஆ) திணைக்களம்
(இ) கடுதாசி
(ஈ) மறியல்

15. கீழுள்ள வாக்கியங்களுள் எது தொடர்பிழை இல்லாத வாக்கியம் ?

(அ) ஒரு செயலைத் திறமையாகச் செய்வது ஒருவர் அறிவையும் கூர்மைத் திறனையும் ஊக்கமும் பொறுத்தது.

(ஆ) ஒரு செயலைத் திறமையாகச் செய்திட அறிவு, கூர்மை, ஊக்கமும் தேவை.

(இ) ஒரு செயலைத் திறமையாகச் செய்திட அறிவு, கூர்மை, ஊக்கம் முதலியன தேவை.

(ஈ) ஒரு செயலைத் திறமையாகச் செய்வது அவருடைய அறிவையும் கூர்மை ஊக்கமும் பொறுத்தது

16. கீழுள்ளனவற்றுள் எது பட்டறிவைக் குறிக்கும் சொல் ?

(அ) உசாவல் (ஆ) கல்வி (இ) காட்சி (ஈ) பாடு

17. தன் ஆற்றலுக்கு மீறிய ஏதோ ஒரு பேராற்றல் தன்னை ஆட்டுவிப்பதை உணர்வு மூலமாகவும் பட்டறிவு மூலமாகவும் தெரிந்த மனிதன் அமைதி வேண்டி அந்த பேராற்றலிடமே அடைக்கலம் புகுந்தான். – மனிதரின் எத்தகைய மனநிலை இவ்வுரையில் குறிக்கப்படுகிறது.

(அ) மகிழ்ச்சி (ஆ) வியப்பு (இ) அச்சம் (ஈ) பணிவு

www.careerindia.com

CAREERINDIA



18. கீழுள்ளனவற்றுள் அப்பர் (திருநாவுக்கரசர்) கூற்று எது ?

(அ) அஞ்சியானும் அன்பு பட்டாகிலும் தெய்வத்தை நினை

(ஆ) வருணன் மேய பெருமணல் உலகமும்

(இ) என்றோள் ஈசற்கு எழில்மடம் எழுபது

(ஈ) செம்மின் திருமுடி எம்திருமாலுக்குச் சேருமே

19. ஒட்டு மொத்தமாக எண்ணிப் பார்த்தால் சட்டெனப் புலப்படுபவை மூன்று. மொழிப்பற்று - காதல் - இயற்கை.

கோடிட்ட வாக்கியத்திற்குப் பொருத்தமான எழுவாய் எது ?

(அ) அவை (ஆ) அவையாவன

(இ) என்பதாகும் (ஈ) மூன்று

20. கீழுள்ள ஊர்களுள் எது முனிவர் பெயரைக் கொண்டுள்ளது ?

(அ) தென்காசி (ஆ) திருநெல்வேலி

(இ) பரங்குன்றாபுரம் (ஈ) சாம்பவர் வடகரை

21. பொருளாகுபெயர் உள்ள பாடலடி எது ?

(அ) தாமரை மலர் போன்ற செவ்வடி

(ஆ) செய்யாள் உறையும் இல்லம்

(இ) கார்ப் பயிர் வளர நீண்ட நாளாகும்

(ஈ) நீலக்கண் நனைந்தது

22. கீழுள்ள எதனில் பண்பாகுபெயர் உள்ளது ?

(அ) பசுமை புரட்சி (ஆ) சட்டமன்றம் கூடியது

(இ) கை ஓங்கியது (ஈ) அவன் ஆட்டம் முடிந்தது

[ திருப்புக

www.careerindia.com

CAREERINDIA



23. 'பொருள் முதல் ஆறினும்'

– இந்நூற்பா அடியில் குறிக்கப் பெறும் ஆறனுள் ஒன்று எது ?

(அ) கருவி (ஆ) குணம்

(இ) செய்பவன் (ஈ) செயல்

24. அசைநிலையாக வரும் இடைச்சொல் கீழ்வருவனவற்றுள் எது ?

(அ) அற்று (ஆ) ஒப்ப (இ) அடடா (ஈ) மியா

25. இடைச்சொல் வகைகளின் எண்ணிக்கை :

(அ) 7 (ஆ) 8 (இ) 9 (ஈ) 10

26. கீழ்வருவனவற்றுள் நான்கு அறிவு பெற்ற உயிர் எது ?

(அ) வானவர் (ஆ) புல் (இ) சிப்பி (ஈ) வண்டு

27. கீழ் உள்ளவற்றுள் எது தற்குறிப்பேற்ற அணிக்குப் பொருந்தும் ?

(அ) இயல்பு நிகழ்ச்சியில் தன்கருத்தினை ஏற்றல்

(ஆ) தன் கருத்தைக் கூறி பிறர் கருத்து விளக்கல்

(இ) நடக்காத நிகழ்ச்சியை நடந்ததாகக் கூறுதல்

(ஈ) ஒன்றை விளக்கிப் பிறிதொன்றைச் சொல்லுதல்

28. நீருக்கும் கண்ணாடிக்கும் சிலேடையாக அமையத்தக்கது எது ?

(அ) ஆடிக் குடத்தடையும்

(ஆ) மூடித்திறக்கின் முகங்காட்டும்

(இ) வழவழப்பாயிருக்கும்

(ஈ) தேங்கியே நிற்கும்

www.careerindia.com

CAREERINDIA



29. கீழ்வருவனவற்றுள் பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல் எது ?

(அ) சால (ஆ) உறு (இ) தவ (ஈ) கடி

30. வஞ்சித்துறைக்கும் வஞ்சிவிருத்தத்திற்கும் உள்ள வேறுபாடு கீழுள்ளனவற்றுள் எதனால் அமையும் ?

(அ) அடிவகை

(ஆ) பாடல் எண்ணிக்கை

(இ) சீர்வகை

(ஈ) அடி எண்ணிக்கை

## பகுதி - II

**குறிப்பு :** பின்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் 50 சொற்களில் (31-ஆம் வினா தவிர்த்து) விடை தருக.

### பிரிவு - அ

(31 - 32) **இரு** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **2x5=10**

31. ‘தாயே உயிரே’ ..... எனத் தொடங்கும் மொழிவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**அல்லது**

‘உலகத்தோடு’ - எனத் தொடங்கும் ஒழுக்கமுடைமை அதிகாரத் திருக்குறளையும், ..... ‘சோர்வு’ என முடியும் சொல்வன்மை அதிகாரக் குறளையும் அடிபிறழாமல் எழுதுக.

32. நெய்தற்கலியில் தோழி உலகியல்பு கூறித் தலைவனை எவ்வாறு நெறிப் படுத்துகிறார் ?

**அல்லது**

புறநானூற்றிலுள்ள ‘புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்’.

– எனும் அடி புலவரின் எத்தகைய உள்ளத்தை உணர்த்துகிறது ?

www.careerindia.com

CAREERINDIA



## பிரிவு - ஆ

(33 - 34) **இரு** வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2x5=10

33. அன்னம், ஆனந்தம், உத்தரவு, உதாரணம், உபயோகம் ஆகிய சொற்களுக்குத் தூய தமிழ்ச் சொற்கள் தருக.

**அல்லது**

செயல்திறன், செயலறிவு இவற்றைப் பாவலரேறு எங்ஙனம் வேறுபடுத்திக் காட்டுகிறார் ?

34. அச்ச உணர்வே தெய்வ வழிபாடு தோன்றுவதற்குக் காரணமாயிற்று என்பதைக் கூற பேராசிரியர் ச.கணபதிராமன் யாருடைய கருத்துகளை எடுத்துக் காட்டுகிறார் ?

**அல்லது**

'குடும்பம் ஒரு பல்கலைக் கழகமாக வேண்டும் என்பது பாரதிதாசன் குறிக்கோள்' எனத் திலகவதி அவர்கள் ஏன் கூறுகிறார் ?

## பிரிவு - இ

(35 - 38) **எவையேனும் இரு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x5=10

35. விட்ட ஆகுபெயரும் விடாத ஆகுபெயரும் எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கவும்.

36. தெரிநிலை வினைமுற்றை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

37. தற்குறிப்பேற்ற அணியை சான்றுடன் விளக்குக.

38. வஞ்சிப்பாவின் இனங்களைக் கூறி ஏதேனும் ஒன்றிற்கு எடுத்துக்காட்டுத் தருக.

www.careerindia.com

CAREERINDIA



## பகுதி - III

**குறிப்பு :** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 100 சொற்கள் அளவில் விடை தருக.

### பிரிவு - அ

பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும். 1x10=10

**39.** திருக்குறள், பிரிவாற்றாமை அதிகாரத் தலைவியின் பண்பின் சிறப்பினை எடுத்துக்காட்டுக.

**அல்லது**

மணிமேகலையுற்ற துயரத்தின் கடுமையினை மலர்வனம் புக்க காதையில் சாத்தனார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

### பிரிவு - ஆ

பின்வரும் வினாவிற்கு விடையளிக்கவும். 1x10=10

**40.** உழைப்பின் பெருமையைப் பாவலரேறு திருக்குறள் வழி எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

**அல்லது**

ஆபிரகாம் பண்டிதர் பிறந்த ஊரின் சிறப்பையும், அவரது கல்விநிலை பற்றியும் கூறுக.

### பிரிவு - இ

**எவையேனும் இரு** வினாக்களுக்கு விடையளிக்கவும். 2x10=20

**41.** மூன்று மருந்து நூல்கள் யாவை ? அவற்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

**42.** மணிமேகலையின் கருத்து வளம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

**43.** போற்றிப் பாடல்கள் குறித்து ஒரு கட்டுரை எழுதுக.

**44.** பல்லவர் காலத்தில் தோன்றிய சமண இலக்கியங்களைக் குறித்து எழுதுக.

[ திருப்புக

www.careerindia.com

CAREERINDIA



## பிரிவு - ஈ

பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும். **2x10=20**

**45.** கீழுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தேர்ந்தெடுத்து கட்டுரை வரைக. (கட்டுரை, உவமை, மரபு, பழமொழி, இன் / இணைத்தொடர் ஆகியன பெற்று அமைதல் வேண்டும்)

(i) விடுதலை இயக்கத்தில் தமிழகம்

(ii) அறிவியலும் ஆக்கச் செயல்களும்

(iii) உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

**46.** நகராட்சித் துப்புரவு அலுவலர்க்கு, தாம் குடியிருக்கும் பகுதியை நன்கு துப்புரவு செய்ய ஆவன செய்யுமாறு உரிய அலுவலருக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் எழுதுக.

**அல்லது**

நும் கல்வித் தகுதியையும், தன் விவரக் குறிப்புகளையும் தந்து, பொருத்தமான பணிவேண்டி உரிய நிறுவனம் ஒன்றிற்கு விண்ணப்பம் எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு :** பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் **150** சொற்கள் அளவில் விடை தருக. **4x15=60**

**47.** இருவேறு தன்மைகளை எடுத்துரைத்து, ஒழுக்கத்தின் மேன்மையினைத் திருவள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார் ?

**அல்லது**

பதிற்றுப்பத்தில் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவனின் வீரமும் வெற்றிச் சிறப்பும் எவ்வாறு விளக்கப்படுகிறது ?

**48.** கண்ணனின் பெருமைகளை வில்லிபுத்தூரார் எவ்வாறு வெளிப்படுத்துகிறார் ?

**அல்லது**

நும் பாஞ்சாலி சபதப் பாடப்பகுதியைக் கொண்டு பாரதியார் கவிதை ஆற்றலை வெளிப்படுத்துக.

www.careerindia.com

CAREERINDIA



**49.** ‘கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே’

– மூதுரையின் இம்மொழிக் கருத்தை விளக்க டாக்டர் உ.வே.சா. கூறும் நிகழ்ச்சியினை எடுத்துரைக்கவும்.

**அல்லது**

ஈழத் தமிழ் மக்கள் பேச்சிலுள்ள தனித்தன்மையான சொல், தொடர் வழக்குகளை விளக்குக.

**50.** பாரதிதாசனின் படைப்புகளில் ‘மானுடம்’ நிலைத்து இருந்ததெனத் திலகவதி அவர்கள் எவ்வாறு நிறுவுகிறார் ?

**அல்லது**

ஆப்ரகாம் பண்டிதரின் செயற்கரிய செயல்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

- o 0 o -

www.careerindia.com